திருவண்ணாமலை மாவட்ட ஆட்சித்தலைவர் அவர்களின் செயல்முறைகள்
முன்னிலை : திரு.பா.முருகேஷ், இ.ஆ.ப., 000073

ந.க.எண்.8475/2019/பஅ3

நாள்:31.12.2021

பொருள்: பணியமைப்பு – திருவண்ணாமலை மாவட்ட ஊரக வளர்ச்சி மற்றும் ஊராட்சி அலகு – கருணை அடிப்படை நியமனம் – திருமதி.B.P.சத்யா, இளநிலை உதவியாளர், கலசபாக்கம் வட்டாரம் – இளநிலை உதவியாளர் நிலையில் 18.09.2019 முற்பகல் பணிவரன்முறை செய்து ஆணையிடப்படுகிறது.

பார்வை:
1. திருவண்ணாமலை மாவட்ட ஆட்சித்தலைவர் அவர்களின் செயல்முறைகள் ந.க.8475/2019/பஅ3,நாள்.16.09.2019.
2. அரசாணை (நிலை) எண்.48, தொழிலாளர் மற்றும் வேலை வாய்ப்பு (க்யூ1)த் துறை, நாள்.26.02.2021.
3. அரசுக் கடித எண்.6895/இ3/2021–5 நாள்:14.12.2021.
4. சென்னை ஊரக வளர்ச்சி மற்றும் ஊராட்சி இயக்குநர் அவர்களின் கடிதம் ந.க.18355/2021/டி2, நாள்.18.12.2021.
5. தொடர்புடைய ஆவணங்கள்.

---0---

ஆணை:

திருவண்ணாமலை மாவட்ட ஊரக வளர்ச்சி மற்றும் ஊராட்சி அலகில், சேத்துப்பட்டு ஊராட்சி ஒன்றியத்திற்குட்பட்ட மண்டகொளத்தூர் ஊராட்சியில் ஊராட்சி செயலராக பணிபுரிந்து 14.06.2019 அன்று பணியிடை காலமான திரு.பு.க.முருகன் என்பவரின் வாரிசுதாரர் திருமதி.B.P.சத்யா என்பவருக்கு பார்வை (1)ல் காணும் செயல்முறையில் கருணை அடிப்படையில் பணிநியமனம் வழங்கி ஆணையிடப்பட்டது. இதனடிப்படையில் தனியர் திருமதி.B.P.சத்யா என்பவர் இளநிலை உதவியாளராக கலசபாக்கம் வட்டாரத்தில் 18.09.2019 முற்பகல் பணியில் சேர்ந்துள்ளார்.

பார்வை 2–ல் காணும் அரசாணையில் 02.02.2016 முதல் 31.12.2019 வரை கருணை அடிப்படையில் பணிநியமனம் செய்யப்பட்டவர்களின் பணியினை விதித்தளர்வு தேவையில்லாத இனங்களுக்கு நியமன அலுவலர்களின் (Appointing Authority) ஒரு நிலை கூடுதல் அதிகாரம் பெற்ற அலுவலர்கள் (one level higher than the appointing authority) வரன்முறை செய்திட ஆணை வழங்கப்பட்டுள்ளதனை தொடர்ந்து திருமதி.B.P.சத்யா, இளநிலை உதவியாளர் என்பவரது பணியினை இளநிலை உதவியாளர் நிலையில் பணியில் சேர்ந்த நாளான 18.09.2019 முற்பகல் முதல் பணிவரன்முறை செய்து ஆணையிடப்படுகிறது.

இவ்வாணை விபரம் தனியரின் பணிப்பதிவேட்டில் உரிய பதிவுகள் மேற்கொள்ளப்பட்டுள்ளது எனச் சான்றளிக்கப்படுகிறது.

மாவட்ட ஆட்சித்தலைவருக்காக
திருவண்ணாமலை.

பெறுநர்
திருமதி.B.P.சத்யா,
இளநிலை உதவியாளர்,
கலசபாக்கம் வட்டாரம் – உரிய வழிமுறையாக

நகல்: இயக்குநர், ஊரக வளர்ச்சி மற்றும் ஊராட்சி இயக்ககம், சென்னை–15.
நகல்: வட்டார வளர்ச்சி அலுவலர் (வ.ஊ / கி.ஊ), கலசபாக்கம் வட்டாரம்.
நகல்: "பஅ3" இருப்பு கோப்பிற்கு.